1981 மே 14]

மன்ற உறுப்பினர்கள் என்றாலும் கண்டக்டரிடம் பாஸைக் காட்ட வேண்டுமென்று அரசாங்கம் அறிவுறுத்துவதற்கு முன் வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் கேட்டதே அறிவுறுத்தியது போலத்தான். எனவே அரசாங்கம்தான் சட்டமன்ற உறுப்பினர்களை இது அறிவுறுத்த வேண்டுமென்று நினைப்பது அவ்வளவு சரியாக இல்லை. ஆகவே, இதை மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் சொல்லி அதை நீங்கள் காட்டியாக வேண்டுமென்று சொல்ல வேண்டும். இதை, அரசாங்கத்திற்காக அல்ல, அந்த ஏழை நடத்துனர்களை காப்பாற்றுவதற்காக நீங்கள் செய்தாக வேண்டுமென்ற கோரிக்கையை அல்லது அந்த வேண்டுகோளை நான் இந்த சட்டமன்றத்திலே அந்தத் தொழிலாளர்களுடைய சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது எங்களுடைய கடமை என்றுகூட நான் கருதுகிறேன்.

திரு. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஒரு மெம்பர் தன்னுடைய மனைவியை அழைத்துச் செல்லலாம் என்ற நியதி இருக்கிறது. ஆனால் ரெயில்வேயிலே, எம்.பி.க்கள் தங்களுடைய அட்டெண்டர்களை யாவது, யாரையாவது அழைத்துச் செல்லலாம் என்று அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றித்தான் நான் ஏற்கனவே சொன்னேன். அதை இப்பொழுது தலைவரோடு விவாதித்து, உறுப்பினர்களுக்குத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

வடாற்காடு மாவட்டத்தில் மண்பாண்டத் தொழில் செய்பவர்களுக்கு

தொழிற் கருவிகள் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1045—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வடாற்காடு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மண்பாண்ட தொழில் செய்பவர்களுக்கு தொழில் கருவிகள் அரசாங்கம் வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் கிராமங்கள் வாரியாக எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்:—(அ) மற்றும் (ஆ) மண்பாண்டத் தொழில் செய்வதற்கும், கருவிகள் வாங்குவதற்குமாக 27 நபர்களுக்கும், செங்கல் சூளை அமைக்க 7 நபர்களுக்கும் தமிழ்நாடு கதர் கிராம வாரியத்தால் 1979-80-ல் நிதி உதவி அளிக்கப்பட்டது. அவ்வாறு அளிக்கப்பட்ட நபர்களின் விவரம் கிராம வாரியாக பின்வருமாறு இருக்கிறது.

மண்பாண்டத் தொழில் கிராமம்.		நபர்களின் எண்ணிக்கை.
1	மேல்மயில்	3
2	கம்மகவன்பெட்	1
3	மடவலம்	6
4	பரண்டப்பாரி அஞ்சல்	7
5	புதூர்	1
6	விலபாக்கம்	1
7	மிர்சாபெட்	1
8	போரூர்	2
9	கே. பி, குப்பம்	2
10	வெல்லலூர்	2
11	கருத்துவம்பாடி	1
	மொத்தம்	27

செங்கல் சூளை கிராமம்		நபர்களின் எண்ணிக்கை
1	பக்கிரிப்பேட்டை	1
2	மேல் அனத்தூர்	1
3	சேத்துவா குப்பம்	1
4	வடுக்கன்தாங்கல்	1
5	கரிக்கல்	1
6	வேலூர்	1
7	ஏர்த்தாங்கல்	1
	மொத்தம் ..	7

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS